# இயல்பு கூட்டப்பொருட்கள்

1. இம்மாநகராட்சியின் முதல் மாமன்ற கூட்டத்தில் வார்டு எண் 1 முதல் 52 வரையுள்ள மாமன்ற உறுப்பினர்கள் கொடுத்த வார்டு பணிகள் குறித்த மனுக்கள் அனைத்தும் மதிப்பீடு செய்யும் பணி நடவடிக்கையில் உள்ளது என்ற விபரம் மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

கோப்பு எண்.3285/2022/இ1

**தீர்மானம் எண். 281 – பார்வையிடப்பட்டது.**

2. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் (ந.க.எண்.20779/2021/மாநஅ1 நாள் 23.02.2022) புதிதாக தரம் உயர்த்தப்பட்ட மாநகராட்சிகளில் மாமன்றம் கூடும் தருணங்களில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களுக்கான மரியாதை மற்றும் சம்பிரதாய மரபு படி செங்கோல் சுமந்து வருவது இயல்பு அதனடிப்படையில் குறுகிய கால இடைவெளிய இருப்பதாலும் (04.03.2022) சென்னை Om Salram Silver Sho (1916 மோதிலால் தெரு த.நகர், சென்னை 17) நிறுவனத்தில் செங்கோல் தயார் நிலையில் இருப்பதாலும் அவசர அவசியம் கருதியும் மாமன்ற முன் அனுமதி பெற்று (மாவட்ட நகராட்சிகள் சட்டம் மற்றும் பிரிவு 15–ன் கீழ்) மேற்படி செங்கோல் வாங்குவதற்கான பணி உத்தரவு வழங்கியமைக்கும் இதற்கான செலவீனம் ரூ.1,62,225/–க்கு பொதுநிதியில் மேற்கொண்டதற்கும் மாமன்ற ஒப்புதலுக்கு அலுவலக குறிப்பு –அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.1958/2022/இ1

**தீர்மானம் எண். 282 – அனுமதிக்கப்பட்டது.**

3. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் (ந.க.எண்.20779/2021/மாநஅ1 நாள் 23.02.2022) புதிதாக தரம் உயர்த்தப்பட்ட மாநகராட்சிகளில் மாமன்ற தலைவர் பதிவியேற்பு விழாவினை முன்னிட்டு மாமன்ற கூட்டம் நடைபெறும்போது அணியவேண்டிய கருப்புநிற அங்கி மற்றும் நகருக்கு முக்கிய பிரமுகர்கள் வருகை புரியும்போது அணிய வேண்டிய சிவப்பு நிற அங்கி ஆகியன உடனடியாக தயார்நிலையில் தயாரித்து வைக்க தெரிவிக்கப்பட்டுள்து. எனவே மேற்படி அங்கிகள் பிரத்தியோகமாக தயாரிக்கும் டெய்லர்கள் ஏனைய மாநகராட்சிகள் மூலம் விசாரித்ததில் சேலம் மாநகரில் ஸ்ரீவிஜயம் டெய்லர்ஸ் என்ற நிறுவனத்தார் கரூர் மாநகராட்சிக்கு தயாரிப்பு பணியில் ஈடுபட்டுள்ளதால், மேற்படி நிறுவனதினரை தொடர்பு கொண்டதில் முழுத்தொகையும் முன்கூட்டியே செலுத்தும் பட்சத்தில் தைத்து கொடுப்பதாக தெரிவித்துள்ளார்கள். குறுகிய கால இடைவெளியே (04.03.2022) இருப்பதாலும் அவசர அவசியம் கருதியும் மாமன்ற முன் அனுமதி பெற்றும் (மாவட்ட நகராட்சிகள் சட்டம் மற்றும் பிரிவு 15–ன் கீழ்) மேற்படி பணியினை செய்வதற்கான பணி உத்தரவு வழங்கியமைக்கும் இதற்கான செலவீனம் ரூ.70,000/–க்கு பொதுநிதியில் மேற்கொண்டதற்கும் மாமன்ற ஒப்புதலுக்கு.

**அலுவலக குறிப்பு –அங்கீகரிக்கலாம்**

கோப்பு எண்.இ1/1960/2022

**தீர்மானம் எண். 283 – அனுமதிக்கப்பட்டது.**

4. இம்மாநகராட்சி எல்லைக்குள் (வார்டு எண்.14) புதிதாக அமையவிருக்கும் மாநகராட்சி பிரதான அலுவலக கட்டிடத்தின் உள் அலங்காரப் பணிகள் (Architeeture and Interiors) மாமன்ற கூட்டம் நடைபெறவிருப்பதையொட்டி உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. எனவே மாமன்ற முன் அனுமதியை எதிர்நோக்கி பணிகள் செய்வதற்கான அனுமதியும், ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதற்கும், இதற்கான உத்தேச செலவினம் ரூ.25.00 ,லட்சத்திற்கும் பொதுநிதியில் செலவினம் மேற்கொள்வதற்கும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –அங்கீகரிக்கலாம்**

கோப்பு எண்.இ1/2329/2022

**தீர்மானம் எண். 284 – அனுமதிக்கப்பட்டது.**

5. இம்மாநகராட்சி எல்லைக்குள் (வார்டு எண்.14) புதிதாக அமையவிருக்கும் மாநகராட்சி பிரதான அலுவலக கட்டிடத்தின் மேற்கூரை அலங்காரப் பணிகள் மற்றும் மின்விசிறி விளக்குகள் (False Ceilng and Decoratons , Fans Lights ) மாமன்ற கூட்டம் நடைபெறவிருப்பதையொட்டி உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. எனவே மாமன்ற முன் அனுமதியை எதிர்நோக்கி பணிகள் செய்வதற்கான அனுமதியும், அவரச அவசியத்தின்பேரில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதற்கும் இதற்கான உத்தேச செலவினம் ரூ.15.00 இலட்சத்திற்கும் பொதுநிதியில் செலவினம் மேற்கொள்வதற்கும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –அங்கீகரிக்கலாம்**

கோப்பு எண்.இ1/2329/2022

**தீர்மானம் எண். 285 – அனுமதிக்கப்பட்டது.**

6. இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.14–ல் புதிதாக அமைக்கப்பட்டு வரும் மாநகராட்சி அலுவலக கட்டிடத்தில் வணக்கத்திற்குரிய மேயர், மற்றும் துணை மேயர் அறை மாமன்றக்கூடம் ஆகியன நவீன முறையில் அமைத்திடும் விதமாக பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டியுள்ளது. எனவே மாமன்ற முன் அனுமதியை எதிர்நோக்கி அவசர அவசியத்தின்பேரில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும், இதற்கான உத்தேச செலவினம் ரூ.24.00 இலட்சத்திற்கும், பொதுநிதியில் செலவினம் மேற்கொள்வதற்கும் மன்ற ஒப்புதல் பெறலாம்.

**அலுவலக குறிப்பு –அங்கீகரிக்கலாம்**

கோப்பு எண்.இ1/2329/2022

**தீர்மானம் எண். 286 – அனுமதிக்கப்பட்டது.**

7. இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் மூலதனமானிய நிதி 2021–2022 (CGF) திட்டத்தின் கீழ் ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் கீழ்கண்ட 8 இடங்களில் உள்ள பூங்காக்களில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்ட நிலையில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் பூங்காக்கள் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள கருத்துரு தயார் செய்திட அறிவுறுத்தப்பட்டது. மேலும் தேர்வு செய்யப்படும் பூங்காவானது 0.50 ஏக்கர் நிரப்பரப்பிற்கு குறைவாக இருத்தல் கூடாது எனவும் அறிவுறுத்தப்பட்டது. எனவே மாநகராட்சிக்கு சொந்தமான 53 எண்ணம் பூங்காக்களில் VI கார்டன் பூங்கா மட்டும் 50 சென்ட் பரப்பளவில் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளதக்க வகையில் அமைந்துள்ளது. எனவே மேற்படி VI கார்டன் பூங்காவினை அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள வேண்டி மாமன்றத்தின் அங்கிகாரத்திற்கும், அதற்கு பதிலாக தென்றல் நகர் மற்றும் CMC நகர் பூங்காக்களில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளவும் மாமன்ற அங்கீகாரத்திற்காக

| | |
|---|---|
| 1. | (VIP கார்டன் பூங்கா) –க்கு பதிலாக தென்றல் நகர் மற்றும் CMC நகர் பூங்காக்கள் |
| 2. | Golde City பூங்கா |
| 3. | ராஜீவ் நகர் |
| 4. | சரக்கல்விளை ஹவுசிங்போர்டு |
| 5. | அருள் நகர் பூங்கா |
| 6 | நேசமணி நகர் |
| 7. | ஒழுகினசேரி சாலையோர பூங்கா |
| 8. | White Rose Nager park |

அலுவலக குறிப்பு –அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.இ1/12108/2021

**தீர்மானம் எண். 287 – அனுமதிக்கப்பட்டது.**

8. நாகர்கோவில் மாநகராட்சியின் தேர்தல் பணியின் பயன்பாட்டிற்கு கணினி உபயோக பிரிண்டர்கள் வாங்கிட உத்தேசிக்கப்பட்டு விலைப்புள்ளி கோரப்பட்டுள்ளது. கீழ்கண்டபடி விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எ | பிரிண்டர் விபரம் | விலைப்புள்ளி விபரம் | | |
|---|---|---|---|---|
| | | M/S.Maatharas Computer service | M/S.Nanotech Computer | Gem Rate |
| 1. | HP Laserjet M438 nda | 67,000 | 68,950 | 74,999 |
| 2. | Canon LBP 6230DN Image Class Laser Printer (With additional Tonner) | 14,000 | 15,200 | 18,750 |

மேற்கண்டதன்படி M/S.Maatharas Computer service, Ramanputhoor, Nagercoil நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக இருப்பதால் அந்நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கியதற்கும், பட்டியல் தொகை வழங்கவும் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்

அலுவலக குறிப்பு– அனுமதிக்கலாம்

கோப்பு எண்.01442/இ3/2022

**தீர்மானம் எண். 288 – அனுமதிக்கப்பட்டது.**

9. நாகர்கோவில் மாநகராட்சியினை மேம்பாடு செய்திடும் வகையிலும் மற்றும் மாநகராட்சியின் வருவாயினை அதிகரிக்கும் வகையிலும் பணிகள் மேற்கொள்ள ஏதுவாக விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து அனுப்பிட அறிவுறுத்தப்பட்டது. அதனடிப்படையில் கீழ்கண்ட பணிகள் தேர்வு செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டது.

| வ.எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை | CGF நிதி | ULB நிதி |
|---|---|---|---|---|
| 1 | வடசேரி பேருந்து நிலையத்தில் கூடுதல் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளுதல் | ரூ.5.00 கோடி | 2.50 | 2.50 |
| 2 | வடசேரி ஆம்னி பேருந்து நிலையத்தில் கட்டுமான பணிகள் மேற்கொள்ளும் பணி | ரூ.1.00 கோடி | 0.50 | 0.50 |
| 3 | மீனாட்சிபுரம் அண்ணாபேருந்து நிலையத்தில் கூடுதல் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் | ரூ.2.50 கோடி | 1.25 | 1.25 |
| 4 | புளியடி எரிவாயு தகனமேடையில் கூடுதலாக ஒரு எண்ணம் LPG பயன்படுத்தி தகன மேடை அமைத்தல் | ரூ.0.50 கோடி | 0.50 | – |
| | மொத்தம் | 9.00 கோடி | 4.75 | 4.25 |

மேற்படி குறிப்பிட்ட நிதி ஆதாரத்தின் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள மாமன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

அலுவலக குறிப்பு– அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.10520/2022/இ3

**தீர்மானம் எண். 289 – அனுமதிக்கப்பட்டது.**